**ஆகஸ்ட் – 15**

# TNPSC துளிகள்

- சீனாவின் செங்டுவில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டு உலக compound men's individual archery போட்டியில் இந்தியாவின் ரிஷப் யாதவ் வெண்கலம் வென்றார்.
- மும்பை நகரானது, ஹோமி பாபா அறிவியல் கல்வி மையத்தில் வானியல் மற்றும் வானியற்பியல் தொடர்பான 18வது சர்வதேச ஒலிம்பியாட் போட்டியை நடத்தியது.
- இந்தியக் கடற்படையானது, விசாகப்பட்டினத்தில் INS உதயகிரி (மும்பையில் மசகான் டாக் ஷிப் பில்டர்ஸ் லிமிடெட் (MDL) என்ற நிறுவனத்தால் கட்டப்பட்டது.) மற்றும் INS ஹிம்கிரி (கொல்கத்தாவில் உள்ள கார்டன் ரீச் ஷிப் பில்டர்ஸ் & இன்ஜினியர்ஸ் (GRSE) என்ற நிறுவனத்தால் கட்டப்பட்டது) ஆகியவற்றை முதன்முறையாகப் படையில் இணைத்துள்ள நிலையில் இது பல்வேறு இந்தியக் கப்பல் கட்டும் தளங்களிலிருந்து பெறப்பட்ட இரண்டு முக்கிய கடற்படை போர்க் கப்பல்கள் ஒரு சேர படையில் இணைக்கப் பட்டதைக் குறிக்கிறது.
- ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ் நிறுவனமானது, இஸ்ரோவின் சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் விக்ரம்-1 ஏவு கலத்தின் முதல் கட்டமான KALAM 1200 மோட்டாரின் / இயக்கியின் முதல் நிலைச் சோதனையை வெற்றிகரமாக நிறைவு செய்தது.
- பிரதமர் சமீபத்தில் மூன்று புதிய வந்தே பாரத் விரைவு இரயில்களை கொடியசைத்து தொடங்கி வைத்த நிலையில், மொத்த வந்தே பாரத் இரயில்களின் எண்ணிக்கை 150 என்ற எண்ணிக்கையைத் தாண்டியது.
- கௌஹாத்தி சர்வதேச விமான நிலையம் ஆனது, அதன் மூங்கில் கட்டமைப்புகள் கொண்ட வடிவமைப்பு மற்றும் போக்குவரத்துக் கட்டடக்கலையில் சிறந்து விளங்குவதற்காக 2025 ஆம் ஆண்டிற்கான சர்வதேசக் கட்டடக்கலை விருதை வென்றது.
- 4வது தமிழ்நாடு சர்வதேச காத்தாடி (பட்டம் விடும்) திருவிழாவானது, ஆகஸ்ட் 14 ஆம் தேதி முதல் 17 ஆம் தேதி வரை மகாபலிபுரத்தின் கிழக்குக் கடற்கரைச் சாலையில் நடைபெற உள்ளது.
- பழங்குடியினரை ஒரு பெரிய பேரழிவிலிருந்து பாதுகாத்ததற்காக டெண்டோங் மலையை கௌரவிக்கும் வகையில், சிக்கிமில் டெண்டோங் லோ ரம் ஃபாட் என்ற பழங்கால லெப்சா திருவிழா கொண்டாடப்பட்டது.
- இந்திய அரசியலில் ஆளுகை மற்றும் அதிகாரப் பரவல் பற்றிய உள் கருத்துகளை கூறும் 'No Minister' என்ற புத்தகத்தினை சாந்தனு குப்தா என்பவர் எழுதியுள்ளார்.
- நாட்டின் முதல் விலங்கு ஸ்டெம் செல் உயிரி வங்கியானது, ஐதராபாத்தில் உள்ள தேசிய விலங்கு உயிரி தொழில்நுட்ப நிறுவனத்தில் தொடங்கப்பட்டது.
- சரிபார்க்கப்பட்ட குறைந்த ஆபத்துள்ள வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கான சந்தை அணுகலை எளிதாக்குவதற்காக SWAGAT-FI எனும் ஒற்றைச் சாளர அமைப்பினை SEBI முன்மொழிந்துள்ளது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தாயுமானவர் திட்டம்

- தமிழ்நாட்டு முதலமைச்சர் 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 12 ஆம் தேதியன்று தாயுமானவர் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

- இந்தத் திட்டமானது 70 வயதிற்கு மேற்பட்ட முதியோர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு அவர்களின் வீடுகளிலேயே ரேஷன் பொருட்களை வழங்குகிறது.
- இது மாநிலம் முழுவதும் 21.7 லட்சத்திற்கும் மேற்பட்ட பயனாளிகளுக்குப் பலன் அளிக்கும்.
- பொது விநியோக முறையின் (PDS) கீழ் உள்ள 34,809 நியாய விலைக் கடைகளில் இருந்து வாகனங்கள் மூலம் ரேஷன் பொருட்கள் விநியோகம் செய்யப்படும்.
- ஒவ்வொரு மாதமும் இரண்டாவது சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் ரேஷன் பொருட்கள் விநியோகம் செய்யப்படும்.
- தமிழ்நாட்டில் தற்போது 37,328 ரேஷன் கடைகள் உள்ளன என்பதோடு கடந்த நான்கு ஆண்டுகளில் 2,394 கடைகள் திறக்கப்பட்டுள்ளன.




# தேசியச் செய்திகள்

## பாங்கி பிஹாரி ஜி மகாராஜ் கோயில் குழு

- உத்தரப் பிரதேசத்தில் உள்ள தாக்கூர் ஸ்ரீ பாங்கி பிஹாரி ஜி கோயிலின் நிர்வாகக் குழுவை உச்ச நீதிமன்றம் இடை நீக்கம் செய்தது.
- கோயிலின் அன்றாட விவகாரங்களை நிர்வகிப்பதற்காக, அலகாபாத் உயர் நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதி அசோக் குமார் தலைமையில் ஓர் உயர் அதிகாரக் குழு அமைக்கப்பட்டது.
- இராஜா ரத்தன் சிங் கொடையாக அளித்த நிலத்தில், 1864 ஆம் ஆண்டில் ஒரு பிரபலமான இந்து யாத்திரைத் தலமாக விளங்கும் இந்தக் கோயில் கட்டப்பட்டது.
- இராஜ் போக் மற்றும் ஷயான் போக் என அழைக்கப்படும் இரண்டு பிரிவுகளுக்கு இடையேயான நீண்டகாலத் தகராறுகள் 1938 ஆம் ஆண்டிலிருந்து இந்தக் கோயில் நிர்வாகத்தைப் பாதித்துள்ளன.

- 2016 ஆம் ஆண்டு அலகாபாத் உயர் நீதிமன்ற உத்தரவு ஆனது, தொடர்ச்சியானத் தகராறுகளுக்கு மத்தியில் மதுராவின் உரிமையியல் நீதிமன்றத்திற்கு இறுதி நிர்வாக ஒப்புதல்களை வழங்கியது.
- 2022 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கூட்ட நெரிசல் ஆனது, பல பேர் காயமடையவும், உயிரிழக்கவும் வழிவகுத்தது. இது பொது நல வழக்கு மற்றும் ஒரு சுயாதீன அறக்கட்டளைக்கான மாநிலத்தின் முன்மொழிவிற்கு வழிவகுத்தது.
- உச்ச நீதிமன்றம் ஆனது, 2025 ஆம் ஆண்டு உத்தரப் பிரதேச ஸ்ரீ பாங்கி பிஹாரி ஜி கோயில் அறக்கட்டளை அவசரச் சட்டத்தினை இடை நிறுத்தியதால், உயர் நீதிமன்ற மறு ஆய்வு நிலுவையில் உள்ளது.
- இந்தச் சட்டத்தின் அரசியலமைப்புச் செல்லுபடித் தன்மை குறித்து எந்த முடிவும் எடுக்கவில்லை என்பதை நீதிமன்றம் தெளிவுபடுத்தியதோடு, இதன் அனைத்து சவால் மனுக்களையும் உயர் நீதிமன்றத்தின் முடிவின் கீழ் வைத்தது.




## புதிய வருமான வரி மசோதா 2025

- அறுபது ஆண்டுகளுக்குப் பிறகு 1961 ஆம் ஆண்டு வருமான வரிச் சட்டத்தை மாற்றுவதற்காக, 2025 ஆம் ஆண்டு வருமான வரி (எண். 2) மசோதாவினை பாராளுமன்றம் நிறைவேற்றியது.
- தற்போதைய வரி விகிதங்களை மாற்றாமல் வரி நிர்வாகத்தினை நவீன மயமாக்குவதை இப்புதிய சட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மதிப்பீட்டு ஆண்டு மற்றும் முந்தைய ஆண்டுக்குப் பதிலாக ஒருங்கிணைந்த கால முறை சார்ந்த வரி ஆண்டை அறிமுகப்படுத்துவதன் மூலம் இது அதனை மிகவும் எளிதாக்குகிறது.
- இந்த மசோதாவில் 536 பிரிவுகள் மற்றும் 16 அட்டவணைகள் உள்ளன.
- 47 ஆக இருந்த அத்தியாயங்களின் எண்ணிக்கையானது 23 ஆகவும், 819 ஆக இருந்த பிரிவுகளின் எண்ணிக்கையானது 536 ஆகவும் குறைக்கப்பட்டுள்ளது.
- அபராதம் இல்லாமல் தாமதமாக வருமானம் தாக்கல் செய்யப்பட்டாலும், தனிநபர்கள் வருமான வரிப் பிடித்தத்தில் (TDS) பிடிக்கப்பட்ட பணத்தைத் திரும்பப் பெற இது வழி

வகுக்கிறது.

- இது வருமான வரி அதிகாரிகளின் அதிகாரங்களை விரிவுபடுத்துவதோடு, ஆய்வு நடவடிக்கைகளின் போது மதிப்பீட்டாளர்களின் தனிப்பட்ட மின்னஞ்சல்கள் மற்றும் சமூக ஊடகக் கணக்குகளை வலுக்கட்டாயமாக திறந்து ஆய்வு செய்ய அனுமதிக்கிறது.




## இராணுவப் பணிகளில் பாலின வரம்பு





- இந்திய இராணுவத்தின் தலைமைச் சட்ட அதிகாரி (JAG) பிரிவில் பெண்களின் இட ஒதுக்கீடுகளை வரையறுக்கும் கொள்கையை உச்ச நீதிமன்றம் ரத்து செய்தது.
- 1950 ஆம் ஆண்டு இராணுவச் சட்டத்தின் 12வது பிரிவின் கீழ், படையில் பெண்கள் இணைவதற்கு அனுமதிக்கப்பட்டவுடன் இராணுவம் ஆனது கூடுதல் கட்டுப்பாடுகளை விதிக்க முடியாது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- ஆண்களுக்கு ஆறு இடங்களும் பெண்களுக்கு மூன்று இடங்களும் மட்டுமே ஒதுக்கும் இந்தக் கொள்கையானது, அரசியலமைப்பின் 14, 15 மற்றும் 16 ஆகிய சரத்துகளை மீறியது.

- நீதிமன்றம் ஒரு பொதுவான தகுதிப் பட்டியலை உத்தரவிட்டது, அதில் தகுதியான பெண்களுக்கு 50% இடங்களுக்குள் தான் இட ஒதுக்கீடு என்று வரம்பிடப்படக் கூடாது என்று கூறியது.
- இராணுவச் சட்டத்தின் 12வது பிரிவு, மத்திய அரசானது அதிகாரப்பூர்வ அறிவிப்பின் மூலம், குறிப்பிட்ட படைப்பிரிவுகள், துறைகள் அல்லது கிளைகளைத் தவிர, வழக்கமான இராணுவத்தில் சேரவோ அல்லது வேலை செய்யவோ பெண்கள் தகுதி அற்றவர்கள் என்று கூறுகிறது.

# சர்வதேசச் செய்திகள்

## உறக்க நோய் இல்லாத நாடு - கென்யா

- உலக சுகாதார அமைப்பானது, கென்யாவைப் பொது சுகாதாரப் பிரச்சினையாக விளங்கிய மனித ஆப்பிரிக்க டிரிபனோசோமியாசிஸ் பாதிப்பு இல்லாத நாடாக சான்றளித்துள்ளது.
- உறக்க நோயை நீக்குவதில் இந்த மைல்கல்லை எட்டிய 10வது நாடாக கென்யா மாறியது.
- மனித ஆப்பிரிக்க டிரிபனோசோமியாசிஸ் ஆனது, பாதிக்கப்பட்ட செட்சி ஈக்களால் பரவும் புரோட்டோசோவா ஒட்டுண்ணிகளால் ஏற்படுகிறது.
- இந்த நோய் ஆனது காய்ச்சல், தலைவலி, மூட்டு வலியை ஏற்படுத்துகிறது மற்றும் நோய் முற்றிய நிலைகளில் குழப்பம், தூக்கக் கோளாறு மற்றும் நடத்தை மாற்றங்களுக்கு வழிவகுக்கிறது.
- கென்யா நாடானது, முன்னதாக கினியா புழு நோயை ஒழித்ததோடு 2018 ஆம் ஆண்டில் அந்நாடு அந்த நோய் பாதிப்பிலிருந்து விடுபட்டதாகச் சான்றளிக்கப்பட்டது.




# பொருளாதாரச் செய்திகள்

## இந்தியாவின் சில்லறைப் பணவீக்கம் – 2025 ஜூலை

- 2025 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில், பிரதான சில்லறைப் பணவீக்க விகிதமானது,

எட்டு ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு 1.55 சதவீதமாகக் குறைந்தது.


❖ இது தேசியப் புள்ளி விவர அலுவலகத்தின் (NSO) நுகர்வோர் விலைக் குறியீட்டால் (CPI) அளவிடப்படுகிறது.

❖ தற்போது அது 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்குப் பிறகு முதல் முறையாக இந்திய ரிசர்வ் வங்கியின் இணக்கமான பணவீக்க இலக்கான 2 சதவீதம் முதல் 6 சதவீதம் என்ற குறைந்தபட்ச மதிப்பு வரம்பிற்குள் வந்துள்ளது.

❖ இதுவரை 2025-26 ஆம் ஆண்டில், CPI பணவீக்கம் ஆனது சராசரியாக 2.4 சதவீதமாக உள்ளது.

❖ இந்திய நுகர்வோர் பயன்பாட்டிற்காக வாங்கும் உணவு, மருத்துவ பராமரிப்புப் பொருட்கள், கல்வி, மின்னணுவியல் போன்ற சரக்குகள் மற்றும் சேவைகளின் விலையில் உள்ள வேறுபாட்டை CPI கணக்கிடுகிறது.

❖ CPI ஆனது உணவு மற்றும் பானங்கள், எரிபொருள் மற்றும் மின்விளக்குகள், வீட்டுவசதி மற்றும் ஆடை, படுக்கை மற்றும் காலணிகள் உள்ளிட்ட பல சார்பு நிலைப் பயன்பாட்டுப் பொருட்களின் குழுக்களைக் கொண்டுள்ளது.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## ப்ளூ பிங்கில் மற்றும் ஷட்டில் காக் காளான்




❖ தெலுங்கானாவில் உள்ள காகஸ்நகர் வனப் பிரிவில் அரிய மற்றும் வண்ணமயமான

ப்ளூ பிங்கில் பூஞ்சைகளின் தோற்றம் கண்டறியப்பட்டுள்ளது.

- 'ப்ளூ பிங்கில்' என்பது நியூசிலாந்தை பூர்வீகமாகக் கொண்ட இனமாகும், மேலும் இது அந்நாட்டின் 50 டாலர் நாணயத் தாளில் இடம் பெற்றுள்ளது.
- மேலும் ஆராய்ச்சியாளர்கள் கவால் புலிகள் வளங்காப்பகத்தில் அரிய வகை காளான் (கிளாத்ரஸ் டெலிகேட்டஸ்) காணப்படுவதாகவும் கூறினர்.
- கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் இந்த இனத்தின் முதல் உறுதிப்படுத்தப்பட்ட பதிவை இது குறிக்கிறது.

# மாநிலச் செய்திகள்

## பணிக்குச் செல்லாத தாய்மார்களுக்கான நிதியுதவி




- சிக்கிம் மாநிலம், பணிக்குச் செல்லாத 32,000 தாய்மார்களுக்கு தலா 20,000 ரூபாய் காசோலைகளை வழங்குவதன் மூலம் பெண்களுக்கான தனது மாபெரும் திட்டத்தினைத் தொடங்கியது.
- பணிக்குச் செல்லாத தாய்மார்களான அனைத்துப் பெண்களுக்கும் ஆமா சக்திகரன் யோஜனாவின் கீழ் ஆண்டிற்கு 40,000 ரூபாய் வழங்கப்படும்.
- சிக்கிம் அரசானது, பெண்கள், குழந்தைகள், முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் துறையின் கீழ் 'நாரி அதாலத்கள்' அமைக்கப்படும் என்றும் அறிவித்தது.
- நாரி அதாலத் என்பது, குறிப்பாக கிராமப்புறம் மற்றும் பகுதியளவு நகர்ப்புறப் பகுதிகளில், அணுகக்கூடிய மற்றும் முறைசாரா நீதியை வழங்குவதற்காக பெண்களால் நடத்தப்படும் ஒரு சமூக அடிப்படையிலான மன்றமாகும்.

# முக்கிய தினங்கள்

## சர்வதேச இளையோர்கள் தினம் 2025 - ஆகஸ்ட் 12

- இளையோர்களின் பங்களிப்புகளை அங்கீகரிப்பது, அவர்கள் எதிர் கொள்ளும் சவால்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவது மற்றும் உலகளாவிய & உள்ளூர் மேம்பாட்டில் இளையோர்களின் ஈடுபாட்டை ஊக்குவிப்பதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த நாள் குறித்த கருத்தாக்கமானது, முதன்முதலில் 1991 ஆம் ஆண்டில் வியன்னாவில் நடைபெற்ற உலக இளையோர் மன்றத்தில் முன்மொழியப்பட்டது.

- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Local Youth Actions for the SDGs and Beyond" என்பதாகும்.




## உலக யானை தினம் 2025 - ஆகஸ்ட் 12

- முதன்முதலில் 2012 ஆம் ஆண்டில் கொண்டாடப்பட்ட இத்தினமானது தாய்லாந்தின் பாட்ரிசியா சிம்ஸ் மற்றும் யானை மறு அறிமுகம் அறக்கட்டளையால் தொடங்கப் பட்டது.
- வேட்டையாடுதல், வாழ்விட இழப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது மற்றும் யானைகளுக்கான நெறிமுறை சார்ந்த சுற்றுலா மற்றும் வாழ்விடப் பாதுகாப்பை மேம்படுத்துவதே இதன் நோக்கமாகும்.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Matriarchs & Memories" என்பதாகும்.





# இதரச் செய்திகள்

## ககோரி இரயில் கொள்ளை நிகழ்வின் 100 ஆம் ஆண்டு நிறைவு

- ககோரி இரயில் கொள்ளை நிகழ்வு ஆனது, 1925 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 09 ஆம் தேதியன்று உத்தரப் பிரதேசத்தில் உள்ள ககோரி இரயில் நிலையம் அருகே நடந்தது.

- புரட்சியாளர்கள் சஹாரன்பூர் முதல் லக்னோ வரையிலான பாதையில் பயணித்த 8-டவுன் என்ற இரயிலை நிறுத்தி அரசு கருவூல நிதியைச் சூறையாடினர்.
- சுதந்திரப் போராட்டத்திற்கு நிதியளிப்பதற்காக இந்துஸ்தான் குடியரசுக் கட்சி சங்க உறுப்பினர்களால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.
- பிரிட்டிஷ் அரசாங்கமானது, பெருமளவிலான எண்ணிக்கையில் புரட்சியாளர்களைக் கைது செய்து கடுமையான தண்டனைகளை வழங்கியது.
- இராம் பிரசாத் பிஸ்மில், அஷ்பகுல்லா கான், இராஜேந்திர லஹிரி மற்றும் ரோஷன் சிங் ஆகியோர் 1927 ஆம் ஆண்டில் தூக்கிலிடப்பட்டனர்.
- அந்த சம்பவத்தில் ஈடுபட்ட மற்றவர்கள் நீண்ட காலச் சிறைத் தண்டனையைப் பெற்றனர்.
- சந்திரசேகர் ஆசாத் கைது செய்யப்படுவதில் இருந்து தப்பி, 1931 ஆம் ஆண்டு வரை போராட்டத்தைத் தொடர்ந்தார்.
- 2025 ஆம் ஆண்டில் இந்த சம்பவத்தின் 100 ஆம் ஆண்டு நிறைவு அதிகாரப் பூர்வமாக அனுசரிக்கப் பட்டது.




## தெருநாய்கள் கட்டுப்பாடு குறித்து உச்ச நீதிமன்றம்

- டெல்லி மற்றும் தேசியத் தலைநகர் பிராந்தியத்தின் சில பகுதிகளில் உள்ள அனைத்து தெரு நாய்களையும் எட்டு வாரங்களுக்குள் அதற்கான பிரத்தியேக தங்குமிடங்களில் தங்க வைக்குமாறு நகராட்சி அதிகாரிகளுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.
- விலங்குகள் மீதான வன்கொடுமைத் தடுப்புச் சட்டம், 1960 ஆனது, "விலங்குகளுக்கு தேவையற்ற வலி அல்லது துன்பத்தை ஏற்படுத்துவதை" தடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தச் சட்டத்தின் கீழ், மத்திய அரசு 2001 ஆம் ஆண்டில் ABC (நாய்கள்) விதிகளை அறிவித்தது.
- விலங்குகளின் பிறப்புக் கட்டுப்பாடு விதிகள் 2023 ஆனது, "பிடித்தல், கருத்தடை செய்தல், தடுப்பூசி போடுதல், விடுவித்தல்" என்ற கோட்பாட்டை வழங்குகிறது.
- ஒரு நாய் வெறி பிடித்ததாகவோ, குணப்படுத்த முடியாத அளவுக்கு நோய் வாய்ப் பட்டதாகவோ அல்லது கால்நடை மருத்துவரால் ஆபத்தான முறையில் ஆக்ரோஷமாக

இருப்பதாகக் கண்டறியப் பட்டாலோ தவிர, நகராட்சி அமைப்புகள் ஆரோக்கியமான நாய்களை நிரந்தரமாக இடமாற்றம் செய்வதையோ அல்லது நீண்ட காலத்திற்கு அவற்றைப் பிடித்து வைப்பதையோ இது தடை செய்கிறது.

## DOG BITES IN INDIA

**THE LARGEST** population of stray dogs is in India; numbers are not known, but are estimated to run into crores. In 2019, the government told Lok Sabha that stray dogs numbered 1.53 crore; it repeated this data in 2022.

**MORE THAN 37 LAKH** cases of dog bites were reported in the country in 2024, up from 30.5 lakh in 2023 and 21.9 lakh in 2022, according to government data from February this year. Nearly 4.3 lakh dog bites were reported in January this year.

**IF THE DOG IS RABID**, its bite can infect the victim with rabies, a viral disease that affects the central nervous system and is almost always fatal if not treated immediately. According to government data from February 2025, 54 people died from rabies in 2024, up from 50 deaths in 2023 and 21 deaths in 2022.

**36% OF RABIES DEATHS** in the world occur in India, according to estimates by the World Health Organization. Dog bites are responsible for about 96% of the mortality and morbidity associated with rabies in India, the WHO says. 30-60% of reported rabies cases and deaths in India occur in children under the age of 15 years, according to WHO.

## டார்டனெல்லஸ் நீர்ச்சந்தி




- துருக்கி அரசானது, கனக்கலே நகருக்கு அருகே ஏற்பட்ட காட்டுத் தீ காரணமாக டார்டனெல்லஸ் நீர்ச்சந்தியை தற்காலிகமாக மூடியது.
- இந்த நீர்ச்சந்தியானது, ஏஜியன் கடலை மர்மாரா கடலுடன் இணைக்கின்ற, ஐரோப்பாவிற்கும், ஆசியாவிற்கும் இடையேயான கனரக வணிகக் கப்பல் போக்குவரத்தை ஆதரிக்கின்ற ஒரு முக்கிய சர்வதேச நீர்வழிப்பாதையாகும்.
- அதிகாரப்பூர்வ பதிவுகளின்படி 2024 ஆம் ஆண்டில் சுமார் 46,000 கப்பல்கள் டார்டனெல்லஸ் வழியாகக் கடந்து சென்றன.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★